1969 மார்ச் 3]

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்கள், கேள்வியில் * * என்ற அந்தப் பகுதியை எடுத்துவிட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The question may be expunged, as it is not in good taste. It may be off the record.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) மேட்டூர் டவுன்சிப் குடிசைவாழ் மக்கள் மீது நடவடிக்கை

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு சுரேந்திரன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"மேட்டூர் டவுன்சிப்புக்குட்பட்ட பகுதியில் குடிசை போட்டு குடியிருக்கும், சுமார் 300-க்கு மேற்பட்ட ஏழைக் குடும்பங்கள் மீது, மேட்டூர் டவுன்சிப் கமிட்டி கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து, தண்டனை வாங்கித் தருவதற்கான நடவடிக்கை எடுத்தது என்ற அவசர, அவசியமான விஷயத்தை விவாதிக்க பேரவையின் நிகழ்ச்சிகளை ஒற்றிவைக்க வேண்டும்" என்று கோரியிருக்கிறார்கள்.

இது அரசின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்ட நிகழ்ச்சியாக இருப்பதாலும், மேலும் மாண்புமிகு உறுப்பினர் நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு இருப்பதாலும், அப்பொழுது இதைப்பற்றிக் கூறுவதற்கு இடம் இருப்பதன் காரணமாகவும் இதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டம் களத்தூர் கிராம விவசாயத் தொழிலாளர் அல்லலும் பாதுகாப்பு நடவடிக்கையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு ஆ. கு. சுப்பையா அவர்கள், "தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா களத்தூர் கிராமத்தில், 30 குடும்பங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களை அடித்தும், அவர்களுடைய பண்ட பாத்திரங்களைப் பறிமுதல் செய்தும், ஊரைவிட்டு விரட்டியும் அவர்கள் சாகுபடி செய்திருந்த நிலங்களில் விளைந்திருந்த நெல்லை அறுவடை செய்து கொண்டதாலும், பாதிக்கப்பட்டவர்களை குடியமர்த்தவும், அவர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவும் வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க வேண்டும்" என்ற ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒற்றிவைத்து, விவாதிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுபற்றி மட்டும் அவர்கள் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : கடந்த சில வாரங்களுக்கு முன்னால், நன்னிலம் தாலுக்கா, களத்தூர் கிராமத்தில் அரிசன விவசாயிகள் விவசாயம் செய்திருக்கக்கூடிய தானியத்தை, நெல் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்த விவசாயிகளை ஊரைவிட்டு விரட்டி, 100 ஏக்காவில் விளைந்திருக்கக்கூடிய 3,000 கலம் நெல்லை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் அந்த ஊருக்குக் குடியேறுவதற்கு அச்சம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளித்து, மீண்டும் அவர்களை அங்கே குடியேற்றுவதற்கு வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த சபையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் களத் தூரைப் பொறுத்த வரையில் ஏற்கனவே முக்கூட்டு மகாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட கூலி நிர்ணய விகிதத்தை அங்குள்ள மிராசுதார்கள் அங்கு இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்குத் தர மறுத்ததன் காரணமாக, ஏற்கனவே, ஒரு தகராறு ஏற்பட்டு அந்தத் தகராறின் முடிவில் நடேச வாண்டையார் என்பவர் கொல்லப்பட்டு, வழக்கு மன்றத்தில் இந்த வழக்கு இருந்து வருகிறது. அதையொட்டி அங்கே அன்றாட கூலி வேலை செய்கின்ற தொழிலாளர் நண்பர்கள் 30 பேர், அவர்களுக்கு இவ்வளவு தான் தரமுடியும் என்று நிர்ணயம் செய்த கூலியை வாங்க மறுத்ததன் காரணமாக, அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்றும், ஆனால் திரு. சுப்பையா அவர்கள் எழுப்பியது போல அவர்கள் ஊரைவிட்டு விரட்டி அடிக்கப்படவில்லை என்றும் அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. மேலும் அதைப்பற்றிய தகவல்களை முற்றிலும் தெரிந்து கொள்ளவும், அங்கே அமைதியான சூழ்நிலை ஏற்படுத்தவும் அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இது அரசின் அன்றாட அலுவல்களின் கீழ் வருவதன் காரணமாக, இந்த அவையை ஒற்றிவைத்து, இதைப்பற்றி விவதிப்பதற்கு அவசியம் இல்லை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தை ஒட்டி, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன். பொதுவாக, நிதிநிலை அறிக்கை பற்றி விவாதம் நடக்கின்ற நேரத்தில் ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி அளிப்பதில்லை என்ற ஒரு பழக்கத்தை இந்த மன்றம் மேற்கொண்டு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

6. அறிவிப்பு.

பேரவை நிகழ்ச்சி விபரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

1—3—1969-ம் நாள், அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படி சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விபரத்தை நான் இப்பொழுது அறிவிக்கிறேன்.

3—3—1969	திங்கள்		
4—3—1969	செவ்வாய்	6 நாட்கள் —	1969–70-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்.
5—3—1969	புதன்		
6—3—1969	வியாழன்		
7—3—1969	வெள்ளி		
8—3—1969	சனி		
9—3—1969	ஞாயிறு	.. விடுமுறை.	
10—3—1969	திங்கள்		
11—3—1969	செவ்வாய்		
12—3—1969	புதன்		
13—3—1969	வியாழன்		
14—3—1969	வெள்ளி		1969-70-ம் ஆண்டுக்கான கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (14 நாட்கள்)
15—3—1969	சனி		
16—3—1969	ஞாயிறு	.. விடுமுறை.	
17—3—1969	திங்கள்		
18—3—1969	செவ்வாய்		
19—3—1969	புதன்	.. தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை.	
20—3—1969	வியாழன்		
21—3—1969	வெள்ளி		
22—3—1969	சனி		
23—3—1969	ஞாயிறு	.. விடுமுறை.	
24—3—1969	திங்கள்		